
# சாராம்சம்

# சமூக அரசியல் யதார்த்தங்கள்

## 1. ஹில்டன் ஹோட்டல் பித்தலாட்டம்

அமேசன் புத்தகங்கள் – ‘Socio-Political Realities - Hilton Hotel Fiasco & Ad hominem Legislation - Expropriation Law’

http://www.consultants21.com/page-1-derivative-actions-in-law.php




***அளவு - 8.25” X 11” - பக்கங்கள் 818***

*சமூக அரசியல் யதார்த்தம் என்ற அதே பிரதான தலைப்பிலே காணப்படும் இப்புத்தகமானது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவது ஹில்டன் ஹோட்டலின் பித்தலாட்டம் தொடர்பான தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள சமூக அரசியல் யதார்த்தங்களை வெளிப்படுத்தும் ஓர் சாராம்சமாகும்*

*"கருப்பு ஜூலை" என அழைக்கப்பட்ட 1983ம் ஆண்டு ஜூலையில் இடம்பெற்ற காட்டுமிராண்டித்தனமான இனக் கலவரத்தின் விளைவாக இலங்கை தொடர்பான சர்வதேசப் பார்வை மங்கியதை சரி செய்யும் முகமாக இலங்கையின் தரத்தினை உயர்த்தி அதன் நற்பெயரை விளங்கச்செய்யும் படியாக ஜனாதிபதி J .R . ஜெயவர்த்தன அவர்களின் அரசானது திட்டமிடல் நிலையிலிருந்த கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானப்பணியினை உடனடியாகத் தொடங்க நடவடிக்கைகளை மேற்க்கொண்டது. இவ் ஹில்டன் ஹோட்டல் கட்டுமானப் பணியானது அதன் உரிமை நிறுவனமான HDL (வரையறுக்கப்பட்ட இலங்கை ஓட்டல் மேம்பாட்டாளர் நிறுவனத்தினால் ) அமுல்படுத்தப்பட்டது.*

*இரு பாரிய புகழ்பெற்ற ஜப்பானிய கம்பெனிகளான வரையறுக்கப்பட்ட மிட்சுய் நிறுவனம் மற்றும் டைசெய் கூட்டுத்தாபனம் என்பனவும் அமெரிக்காவின் ஹில்டன் சர்வதேச சங்கிலித்தொடர் ஹோட்டல் நிறுவனமும் இப்பணியில் பங்களிப்பாற்றியதே இதற்கான பிரதான பலமாயிருந்தது. எனவே இவ் அமெரிக்கா மற்றும் ஜப்பானிய நிறுவனங்கள் இணைந்து இக்கட்டுமானப் பணியை முதலிட்டமையானது அக்காலத்திலே இலங்கை மீதான சர்வதேச நம்பிக்கையினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. இவ் ஹோட்டல் பணியின் கட்டிட வடிவமைப்பாளர்களாக புகழ்பெற்ற ஜப்பானிய கட்டிட நிபுணர்களான காங்கோ கிகாகு செக்கிஷா மற்றும் யோசோ ஷிபாடா கூட்டு நிறுவனம் ஆகியோர் திகழ்ந்தனர்.*

*இதற்கமைய ஜனாதிபதி J.R.ஜயவர்தனவின் தலையீட்டினால் இக்கட்டுமானப்பணிக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் இவ் ஜப்பானிய நிறுவனங்களிடம் கடனுதவியினை பெற இலங்கை அரசு உத்தரவாதமளித்தது. அத்தோடு இக்கட்டுமானத்திற்கும் பூர்த்திக்குமான சகல இறக்குமதிகள் மீதான இறக்குமதி வரிகளும் விலக்களிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பிரதமர் R. பிரேமதாச அவர்களும் கொழும்பின் பிரதானமான பகுதியிலே நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலமாக 7 ஏக்கர் காணியினை வழங்கியிருந்தார். இது 99 வருட குத்தகை அடிப்படையில், 30 ஆண்டு காலப்பகுதிக்குள் எதுவித வட்டியுமின்றி செலுத்தப்படும் வகையில் வழங்கப்பட்டிருந்தது.*

*நூலாசிரியரின் முதல் 3 புத்தகங்களிலே ஹில்டன் ஹோட்டல் கட்டுமானப் பணியிலே இவ் ஜப்பானிய கம்பெனிகள் எவ்வாறு இலங்கை அரசின் மீதான பாரிய மோசடியினை முயற்சித்திருந்தது என்றும் அதனை நூலாசிரியர் எவ்வாறு வெற்றிகரமாகத் தடுப்பதற்கு விசாரணைகள் மூலமாகவும், இலங்கையின் முதலாவது பொதுநல வழக்கினை தொடுத்தல் மூலமாகவும் நடவடிக்கையினை மேற்க்கொண்டனர் என்பதையும் விபரமாக விளக்கியுள்ளார்*

*"ஹில்டன் ஹோட்டல் பித்தலாட்டம்" என்ற இப்புத்தகத்தின் முதல்பகுதியினை புரிந்துகொள்ள நூலாசிரியரின் இப்பாரிய மோசடியுடன் தொடர்புடைய முதல் 3 புத்தகங்களையும் வாசித்து விளங்கியிருத்தல் அவசியமாகும்*

*ஆதாரம்: 'கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் - இலங்கை அரசின் மீதான மோசடி - பாகம் - 1 - பிறர் சார்பாக பதியப்பட்ட இலங்கையின் முதலாவது வழக்கு' - 'கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் இலங்கை அரசின் மீதான மோசடி - பாகம் 2 - வெளிப்படுத்தப்பட்ட குற்றம் ஆயினும் முறையற்ற முறையில் மறைக்கப்பட்ட'- கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் - இலங்கை அரசின் மீதான மோசடி பக்கம் - 3 - மோசடியின் தீர்வு.'*

இப்பாரிய மோசடியினை மேற்கொள்வதன் மூலம் இவ் ஜப்பானிய கம்பெனிகள், இலங்கை அரசு அவர்களுக்கு வழங்கியிருந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் இலங்கைக்கான அந்நிய செலவாணியின் பெரும் பாகத்தினை பறிப்பதற்கு தந்திரமாக முயற்சித்தது

நூலாசிரியர் இதனை துரிதமாகக் கண்டறிந்து விசாரணையினையும் சட்ட நடவடிக்கையினை எடுத்ததின் அடிப்படையிலும் கொழும்பு மாவட்ட நீதிமன்றமானது இவ் ஜப்பானிய கம்பெனிகளுக்கு HDL இனாலோ, உத்தரவாதிகள் என்ற அடிப்படையில் இலங்கை அரசினாலோ எதுவித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளக் கூடாது என தடையுத்தரவினை வழங்கியிருந்தது. இதனால் இலங்கை அரசின் உத்தரவாதமானது இல்லாமல் செய்யப்பட்டதுடன் சட்டத்தின் முன் செயலற்றதாயும் வெற்றிடத்தினை உருவாக்கியது.

இருப்பினும் ஜப்பானிய தூதுவரின் அழுத்தத்தின் பேரில் திறைசேரியின் செயலாளர் R . பாஸ்கரலிங்கம் பின்வரும் கடிதத்தில் உள்ளவாறு எழுதுகிறார்: 'இதனை தயவாக வாசிக்கவும். இது எமக்கான உதவிகளை பாதிக்கக் கூடும் என ஜப்பானிய தூதுவர் தெரிவித்தார்'

*"டி சில்வா & பெரேரா*

*பதிவுத் தபால்*

*நவம்பர் 12, 1991*

*கௌ. சுனில் த சில்வா*
*சட்ட மா அதிபர்*
*சட்ட மா அதிபர் திணைக்களம்*
*ஹல்ஃப்ட்ஸ்டார்ப் வீதி*
*கொழும்பு 12.*

*கௌரவ ஐயா,*

*டி. சி. கொழும்பு வழக்கு எண் 3155/விசேட*

*எமது முன்னைய கடித பரிமாற்றங்களுக்கு அமைய செயல் ஆற்றுவது தொடர்பாக எழுதுவதோடு 28.01.91 இல் கௌரவ மாவட்ட நீதிபதியினால் மேற்குறித்த நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட ஆணையின் பிரதியினையும் அதில் 1ம் 2ம் 3ம் மற்றும் 4ம் பிரதிவாதிகளுக்கெதிரான தடையுத்தரவினையும் சமர்ப்பிக்கின்றோம்.*

*கௌரவ மாவட்ட நீதிபதியின் ஆணையின் உள்ளடக்கங்களை கவனத்தில் கொள்வீர்கள் எனவும் குறிப்பாக சூழ்ச்சிகரமான மோசடி தொடர்பாகவும் முதல் தோற்றத்திலேயே மோசடி நடந்தமைக்கான சான்றுகள் நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டதால், இலங்கையின் பொது மக்கள் நலனுக்காக சர்ச்சைக்குரிய அரசின் உத்தரவாதம் இவ்வாறான சூழ்நிலையில் சட்டத்தின் முன் இல்லாமல் செய்யப்பட்டதையும் செல்லுபடியற்றது என்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க நடவக்கைகள் எடுப்பீர்கள் எனவும் நம்புகிறோம்.*

*அதன்படி ஜப்பானின் எக்ஸிம் வங்கிக்கும் குறித்த கடன் வழங்களில் தொடர்புள்ள வேறு ஏதேனும் நிதி நிறுவனத்திற்கும் அறிவிப்பது தொடர்பாக கருத்தில் கொள்க. 26.09.90 இன் எமது கடிதம் தொடர்பாகவும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதோடு அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்திருப்பீர்கள் என நம்புகிறோம்*

*கடிதத்தினை பெற்றுக்கொண்டமையினை தயவு செய்து உறுதிப்படுத்தவும்*

*இக்கணம் உண்மையுள்ள*
*(ஒப்பம்)*
*சட்டத்தரணி*
*பிரதி : செயலாளர்- நிதியமைச்சு, செயலாளர் – திறைசேரி"*

---

*நூலாசிரியரின் இப்படியான முயற்சிகளிலே ,அப்போதைய மிகவும் சக்திவாய்ந்த நேரடியான அமைச்சரும் , தெற்கின் JVP பயங்கரவாதத்தினை வெற்றிகரமாக ஒடுக்கிய பாதுகாப்பிற்கான இராஜாங்க அமைச்சருமான இரஞ்சன் விஜேரட்ன பெரும் பலமாக விளங்கினார். அத்தோடு நூலாசிரியரின் முதலாவது சட்ட நடவடிக்கையின் போது பிரதமர் R. பிரேமதாச அவர்களையும் அமைச்சரவையையும் உடனடியாக*

தெளிவுபடுத்தி இலங்கை அரசின் மீதும் பொது மக்களின் மீதும் மேற்கொள்ளப்பட்ட பாரிய மோசடியினை தடுக்க வேண்டினார்.

*"கடிதம்*

*இரஞ்சன் விஜேரட்ன பா. உ*
*பெருந்தோட்டத்துறை அமைச்சர்*

*நவம்பர் 15, 1990.*

*அதிமேதகு ஜனாதிபதி R. பிரேமதாச*
*இலங்கை ஜனாதிபதி*
*ஜனாதிபதி செயலகம்*
*கொழும்பு - 1*

*இரகசியமானது*

*அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,*

*<u>ஹில்டன் ஹோட்டல்</u>*

*நவம்பர் 14, 1990 புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கூறப்பட்ட கருத்துகளுக்கு மேலதிகமாக கட்டட ஒப்பந்தக்காரர் / கட்டட வடிவமைப்பாளர்களுக்கு எதிராக இடைக்கால உத்தரவினை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ள திரு நிஹால் ஸ்ரீ அமரசேகரவினால் எனக்கு அனுப்பப்பட்ட நவம்பர் 14 1990 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரதியினை இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் அனுப்புகிறேன் .*

*இங்கனம் உண்மையுள்ள*
*(ஒப்பம்)*

*இரஞ்சன் விஜேரட்ன*
*பெருந்தோட்டத்துறை அமைச்சரும்*
*பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்"*

---

*"பெருந்தோட்ட தொழில் அமைச்சு*

*நவம்பர் 15, 1990*

*திரு. நிஹால் ஸ்ரீ அமரசேகர*
*காமிண்டக்ஸ் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் லிமிடெட்*
*167/4, ஸ்ரீ விபுலசேன மாவத்தை*
*கொழும்பு 10*

*அன்பின் நிஹால்,*

*நவம்பர் 14, 1990 திகதியிடப்பட்ட தங்களது கடிதமும் அதனோடு இணைக்கப்பட்ட ஆவணங்களும் கிடைக்கப்பெற்றமையினை உறுதிப்படுத்தி இக்கடிதத்தினை எழுதுகிறேன்.*

*இவ்விடயத்தினை நவம்பர் 14, 1990 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எழுப்பியதுடன் த தாங்கள் எனக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியினையும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணப் பிரதிகளையும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் அனுப்பியுள்ளேன்.*

*இங்கனம் உண்மையுள்ள*
*(ஒப்பம்)*

*இரஞ்சன் விஜேரட்ன*
*பெருந்தோட்ட தொழில் அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்"*

---

இதற்கமைய ஜனாதிபதி R. பிரேமதாசாவின் பொருளாதார ஆலோசகர் C. குணசிங்கம் அவர்கள் நூலாசிரியரை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நூலாசிரியரால் தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்பாக உண்மைத்தன்மையினையும் விபரங்களையும் அறியும்படியும் உத்தரவாதிகளான அரசோ அல்லது HDL நிறுவனமோ ஜப்பானிய கம்பெனிகளுக்கு எந்தவொரு கொடுப்பனவையும் வழங்காதபடி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவு தொடர்பாகவும் நீண்டதொரு கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார்.

ஜனாதிபதி R பிரேமதாச அவர்களுக்கு இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டதன் விளைவாக தனது செயலாளர் K. H. J விஜேயதாச அவர்களுக்கு, பின்வரும் கடிதத்தினை திறைசேரியின் செயலாளர் திரு. R. பாஸ்கரலிங்கம் அவர்களுக்கு, அரசு உடனடியாக இதில் தலையிட்டு இப்பாரிய மோசடிக்கு எதிராக

நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதற்கான பொறுப்பினை சிறுபான்மையான பங்குதாரருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக் கூடாது, ஏனெனில் இச்சூழலில் அரசு ஏன் எந்த நடவடிக்கையினையும் எடுக்கவில்லை என கேள்வி எழும்பும் எனவும், எழுதும் படி பணித்தார்

*"ஜனாதிபதி செயலகம்*

*R. பாஸ்கரலிங்கம்.* *டிசெம்பர் 17, 1990*
*திறைசேரி - செயலாளர்*

*ஹில்டன் ஹோட்டல்*

*மேட்குறித்த விடயத்தில் நவம்பர் 15 1990 திகதியிடப்பட்ட, அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான கௌ. ரஞ்சன் விஜேரட்னவினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியினை அனுப்புகிறேன்.*

*அத்துடன் நவம்பர் 14,1990 திகதியிடப்பட்ட திரு. நிஹால் ஸ்ரீ அமரசேகரவினால் அனுப்பப்பட்ட்ட கடிதம் உட்பட கௌ.அமைச்சர் அவர்களினால் அனுப்பப்பட்ட ஏனைய ஆவணங்களையும் அனுப்புகிறேன்.*
*இது தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி முன் சமர்ப்பித்த குறித்தளவு சில அவதானம் தொடர்பாக உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்*

*ஒரு காரணமானது, பொது மக்களின் கருத்தானது இதுவரை பகிரங்கப்படுத்தப்படாமைக்கு காரணமாவது ஆரம்பத்திலிருந்தே இவ்விடயம் நீதித்துறையின் கவனத்தில் இருந்ததேயாகும். அடுத்தது மாவட்ட நீதிமன்றமானது மோசடி நடந்தமையினை உறுதிப்படுத்தியிருந்த பட்சத்தில், அரசு ஓர் பிரதான பங்குதாரராக அமையும் குறித்த நிறுவன ஏன் தானாக சட்ட நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை என்ற கேள்வி எழுகின்றது. அதேபோல் மேலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னும் நிறுவனமானது தனது பங்குதார் பேரிலும் பொது மக்கள் பேரிலும் இருக்கும் அடிப்படை பொறுப்பான குறித்த விடயம் தொடர்பான சட்ட நடவடிக்கை எடுப்பதிலிருந்து தூர விலகி நின்றது ஏன் ? என்ற கேள்வியும் எழுகிறது. இவற்றிலிருந்து பொது மக்களின் பணமானது இவ்வாறான மோசடியான ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுப்பனவுக்காக உபயோகமாவதை தடுக்க ஏன் ஓர் சிறுபான்மை பங்குதாரர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் எண்ணத்தோன்றுகிறது. ஜப்பானிய நிறுவனங்கள் அரசாங்கத்தினை உத்தரவாதிகளாக அழைத்திருப்பின் அதன் முடிவு இவ்வாறே இருந்திருக்கும்.*

*இவ்விடயத்தில் ஜப்பானிய அரசின் மென்மைத்தன்மையை பொறுத்த வரை , ஜப்பான் நாட்டின் மக்கள் மத்தியில் மோசடியில் ஈடுபடும் ஜப்பானிய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் குறித்தான அவதானம் அதிகரித்து வருவதாக அறியப்படுகிறது. எனவே ஜப்பானின் எந்த அரசும் வெளி நாடு ஒன்றில் மோசடியில் ஈடுபடும் எந்த நிறுவனத்திற்கும் வசதிகள் வழங்குவதாக காணப்படுவதை விரும்பாது.*

*இவ்விடயங்கள் வெளிச்சத்திலே, அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் நீதிமன்றத்தில் நடப்பிலுள்ள இவ்வழக்கு தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வியினை அமைச்சரவையில் முன்வைக்கும் பொறுப்பினை உங்களுக்கு தருகிறார்.*

*ஜனாதிபதியின் பணிப்பானது உங்கள் கவனத்தில் இருப்பதனை வரவேற்கிறேன்*

*(ஒப்பம்)*

*KHL விஜேதாச*
*ஜனாதிபதியின் செயலாளர்"*

---

குறித்த அதே தினத்திலே *12.11.1991* நூலாசிரியரான வாதியின் சட்டத்தரணி இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் இசாமு நீட்டா விற்கு பின்வரும் கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியது

*"டி சில்வா & பெரேரா.*

*நவம்பர் 12, 1991*

*பதிவுத்தபால்*

*பெரு மதிப்பிற்குரிய இசமு நீட்டா*
*இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர்*
*ஜப்பானிய தூதரகம்*
*20, கிரெகரிஸ் வீதி*
*கொழும்பு 7*

*கௌரவ ஐயா*

ஹில்டன் ஹோட்டல்
ஹோட்டல் டெவெலப்பர்ஸ் லங்கா லிமிடெட்
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் 3155/விசேட

எமது வடிக்கையாளரான திரு நிஹால் ஸ்ரீ அமரசேகர FCA ,FCMA ஆகிய மேட்குறிப்பிட்ட வழக்கின் வாதியின் சார்பில் இக்கடிதத்தினை அனுப்பவதோடு பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்

இவ்வழக்கானது எமது வாடிக்கையாளரால் பங்குதாரர் என்ற வகையில் ஜப்பானிய நிறுவனங்களான, மிட்சுய் அண்ட் கோ டைசெய் கார்பொரேஷன், மற்றும் காங்கோ கிகாகு செகிஷா, யோசோ ஷய்பாட்டாண்ட அஸோஸியேட்ஸ் ஆகியோருக்கெதிராக பதியப்பட்ட பொதுநல வழக்காகும்.

மேட்குறிப்பிட்ட வழக்கில் மாவட்ட நீதிபதியினால் 28.10.91 இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரதியினை இத்துடன் இணைத்திருக்கிறோம். இவ் ஜப்பானிய கம்பெனிகள் பதிந்த ஆட்சேபனை மனுவின் மீதான விசாரணையினை தொடர்ந்து இக்கம்பெனிகளுக்கெதிராக வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவின் பிரதியும் இணைக்கப்பட்டுள்ளது

தாங்கள் அறிந்திருக்கிற பிரகாரம் இலங்கை ஓர் வளர்ச்சியடைந்து வரும் நாடாகவும் எப்பொழுதும் ஜப்பானுடனான மிகுதியான நல்லுறவை வரவேற்கின்றதாயும் இருக்கிறது. அதற்கிணங்க எமது நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் இம்முக்கியமான விடயங்களை புரிந்துகொண்டு உரிய நடவடிக்கையினை எடுப்பீர்கள் என்றும் குறித்த விடயங்கள் தொடர்பாக ஜப்பானின் உரிய அதிகாரிகளுக்கு அவர்கள் இதற்கான நடவடிக்கையினை எடுக்கும் படி அறியத் தருவீர்கள் எனவும் நம்புகிறேன்.

அதிமேதகு தூதுவர் அவர்களே எமது இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுக்கு இக்கம்பெனிகளின் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் ஏதுவாக அமையாது என்பதனை தங்கள் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறோம்

இவ்விடயம் தொடர்பான முக்கிய தரவுகளை வெளிப்படுத்தும் வகையில் எமது வாடிக்கையாளரின் சார்பில் அவரது வழக்கறிஞரினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

இங்கனம் உண்மையுள்ள
(ஒப்பம்)

பிரதிகள்: கணம். ஹரோல்ட் ஹேரத் - இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
செயலாளர் - இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
இலங்கைக்கான தூதுவர் – ஜப்பான்"

---

ஜனாதிபதி R பிரேமதாச அவர்களின் மேற்குறித்த நிலைப்பாட்டிற்கு மாறாக தொடர்ந்து வந்த சட்ட மா அதிபர் T.J. மாறப்பன அவர்கள் கொழும்பு மாவட்ட நீதி மன்றில் நடைபெற்ற இடைக்கால உத்தரவிற்கான விசாரணையில் பங்குபற்றாத நிலையிலும் இளங்களின் மென் முறையீட்டு நீதிமன்றில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யாத நிலையிலும் சட்டத்தரணி ஷிப்பிலி அஸீஸ் இனூடாக, கொழும்பு மாவட்ட நீதிமன்றின் தீர்ப்பிற்கெதிராக இவ் ஜப்பானிய கம்பெனிகளால் மேல் முறையீடு நீதிமன்றில் தாக்கல் செய்த விண்ணப்பத்திற்கு ஆதரவாக பிரசன்னமானார்.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் K. N. சொக்சி, HDL இன் தவறிழைத்த நிர்வாகியும் பிரதிவாதியும் ஆனவர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினை தவறாக திசைதிருப்பும்படி சட்டத்தரணி நிஹால் பெர்னாண்டோவினூடாக பிரசன்னமானார். இருப்பினும் இதனை தொடர்ந்து உயர் நீதித்துறையான உச்ச நீதிமன்றமானது இவ்விரு சாராரும் உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்வதை தடை செய்தது.

தொடர்ச்சியாக 28.11.1991இல், நிதி அமைச்சின் செயலாளர் R. பாஸ்கரலிங்கம், ஜனாதிபதி செயலாளர் திரு. K. H .J . விஜயதாச விற்கு பின்வரும் கடிதத்தினை எழுதுகிறார். வேறு காரணிகளுக்கு மத்தியில் நிதி அமைச்சானது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி J. F. A சோசா அவர்களை கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் பாரிய மோசடி தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் படி பணித்திருந்த பொழுதும் J. F. A சோசா அவர்கள் சகல ஆவணங்களையும் பரிசீலித்து இக்கட்டுமானப் பணியில் யாதேனும் முறைகேடுகள் நடைபெறவில்லை என அறிக்கை சமர்ப்பித்தார். J. F. A சோசா மலைக்கத்தக்க விதத்தில் இயற்கையான நீதியினை மீறியதுடன் வாதியின் பக்க கருத்துக்களையும் கேட்கவில்லை. இது வெறுக்கத்தக்க வகையிலான "மூடி மறைப்பதற்கான" ஓர் அறிக்கையாகும்.

*"நிதி அமைச்சு*

*செயலகம், கொழும்பு - 1*

*நவம்பர் 28, 1991*

*திரு. K.H.J. விஜேதாச*
*ஜனாதிபதி செயலாளர்*

*இது 5.9.91, 18.11.91 ஆகிய திகதிகளிலே பா. உ . வாசுதேவ நானாயக்கார அவர்களிடமிருந்து ஹில்டன் ஹோட்டல் கே வேலைத்திட்டம் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் குறித்ததாகும்.*

*இவ்விடயமானது HDL (ஹோட்டல் டிவேலோபேர்ஸ் லங்கா) வின் முன்னாள் நிர்வாகிகளுல் ஒருவரான திரு நிஹால் ஸ்ரீ அமரசேகரவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்ப்பிற்காக நிலுவையிலுள்ள 2 வழக்குகளாகும்.*

*இவ்வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பானது சரியானதன்று. இவ்வழக்குகளுள் ஒன்றிற்கு (கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 3155/விசேட) வழக்கு விசாரணைகள் நிலுவையாயிருந்த நிலையில் மாவட்ட நீதிபதி இடைக்கால உத்தரவு ஒன்றினை முன் வைக்கிறார். நான் அறிந்த வகையில் திரு நிஹால் அமரசேகர அவர்களினால் நீதிமன்றின் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் மாவட்ட நீதிபதி பின்வருமாறு அவதானிக்கிறார். " உண்மையில் கூறப்பட்ட விடயங்களை முன்வைக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் ஓர் முழுமையான விசாரணையினை மேற்கொள்வதன் மூலம் கவனத்தில் கொள்ளப்படலாம்"*

*இவ்வழக்கின் 2ம் 3ம் பிரதிவாதிகளான ஹில்டன் ஹோட்டல் பணியின் ஜப்பானிய கூட்டு இணைப்பாளிகள் மேல் முறையீட்டு நீதிமன்றில் இத்தீர்ப்பிற்கு எதிராக இல. 206/91 என்ற விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பிக்கின்றனர்.*

*அரசாங்கமானது குறித்த இவ்விடயம் நீதிமன்றில் இருக்கும் இந்த சூழ்நிலையில், யாதாயினும் நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் அது என்ன என்பதனை தீர்மானிக்க நீதிமன்றத்தின் இறுதித் தீர்விற்காக பொறுத்திருத்தல் வேண்டும்.*

*நிதி அமைச்சின் மீதான குற்றச்சாட்டை பொறுத்த வரை,திரு அமரசேகர அவர்கள் முதன் முதலாக ஹில்டன் ஹோட்டல் பணியில் நடைபெறுவதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் குறித்து அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்த போது, அமைச்சானது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. J.F.A. சோசா அவர்களை குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் படி பணித்தது. திரு சோசா இது தொடர்பான ஆவணங்களை பரீட்சித்து இவ் ஹோட்டல் கட்டுமானப்பணியின் அமுல்படுத்தலில் எந்த வித முறைகேடும் நடைபெறவில்லை என அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து, மேலதிக சொலிசிட்டர் நாயகம், இத் தரவுகளை ஆராய்ந்ததில் சட்ட மா அதிபரின் திணைக்களத்தினால் திரு அமரசேகர அவர்களின் குற்றச்சாட்டுகளுடன் இணங்க முடியவில்லை என நிதி அமைச்சிற்கு அறிவித்தார் என்பதனை தெரியப்படுத்த விரும்புகிறேன்.*

*(ஒப்பம்)*

*R. பாஸ்கரலிங்கம்*
*செயலாளர்*
*நிதி அமைச்சு"*

---

*முரணான முறையில், 17.12.1991 திகதியிடப்பட்ட கடிதத்தில், இடைக்கால தடை உத்தரவிற்கு பின்னர் K .N. சொக்சியின் பெயர் குறிப்பிடப்படாத குற்றவாளியாக வளங்கப்பட்ட மாவட்ட நீதிமன்றின் 28.10.1991 இந்த தீர்ப்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றானது வழங்கல்கள் செய்யப்படுவதற்கு முன்பதாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததனையும் மற்றும் ஹில்டன் ஹோட்டல் இன் கட்டுமானம் தொடர்பில் சரியான பரிசோதனை செய்வதனை சமுதாயத்தில் செல்வாக்கு உள்ளவர்கள் இடைப்பட்ட தடையாக இருந்தனர் எனவும் தீர்ப்பு வழங்கியிருந்தது ஆனால் 17.12.1991 இல் திகதியிடப்பட்ட இக்கடிதத்தின் படி திறைசேரியின் செயலாளரான திரு .R . பாஸ்கரலிங்கம் அவர்கள் "தயவு செய்து சட்ட மா அதிபரோடும் திரு. சொக்சி அவர்களோடும் ஆலோசனை செய்யவும் ஜனாதிபதி அவர்களுக்கு இக்கடிதத்திற்கு மாறுத்தரம் வழங்குதல் அவசியம் "என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

*"பாராளுமன்றம்*

*<u>பதிவுத்தபால்</u>*

*டிசம்பர் 17,1991*

*அதிமேதகு R. பிரேமதாச*
*இலங்கை ஜனாதிபதி*
*ஜனாதிபதி செயலகம்*

*கொழும்பு - 1*

*அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,*

*<u>ஹில்டன் ஹோட்டல்</u>*

*தங்களது 03.12.91 திகதியிடப்பட்ட கடிதம் திரு R பாஸ்கரலிங்கம் அவர்கள் தங்களுக்கு அனுப்பிய 25.11.91 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரதியுடன் கிடைக்கப்பெற்றது.*

*தங்களுக்கு எழுதப்பட்ட எனது சில கடிதங்களில் நான் முன்வைத்த விடயங்கள் திரு பாஸ்கரலிங்கம் அவர்கள் அனுப்பிய பதிலில் சந்திக்கப்படவில்லை*

*இடைக்கால தண்டினை வழங்கிய கொழும்பு மாவட்ட நீதிபதியின் தீர்ப்பில், இலங்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் எதிராக ஜப்பானிய கம்பெனிகளால் பாரிய மோசடி நடந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிது அத்தோடு ஹில்டன் ஹோட்டலின் உரிமைக்கு கம்பெனியின் நிர்வாகிகள் சிலரும் இம்மோசடியில் பங்குடையவர்களாக தெரிவிக்கப்படுகிறது.*

*கொழும்பு மாவட்ட நீதிபதியின் இத்தரவுகளின் அடிப்படையில், கீழ்வரும் விடயங்கள், உயர் நிர்வாக அதிகாரம் தங்களிடம் என்ற வகையில் விடை காணும்படி தங்கள் கவனத்திற்கு முக்கிய முன்னுரிமை விடயமாக கொண்டுவரப்படுகிறது*

*(a ) உண்மையிலேயே பல பில்லியன் ரூபாய்களை நாட்டிலிருந்து மோசடியான முறையில் சூறையாடுவதற்கான வழிகள் இருக்கின்றனவா, அவ்வாறாயின் அதற்கு யார் பொறுப்பாளிகள் ?*

*(b ) ஹில்ட்டன் ஹோட்டல் திட்டப்பணியில் பங்களிப்பற்றும் ஜப்பானிய கம்பெனிகள் இதற்கு பொறுப்பானவர்களா அதோடு உள்நாட்டு நிர்வாகிகளுள் இவ் வஞ்சகமான செயலிற்கு உடந்தையாயிருந்தவர் யார்*

*(c ) இதற்கு பொறுப்பான உள்ளூர் நபர்கள் உடனடியாக கம்பெனியின் பொறுப்புக்களில் இருந்தும் அல்லது அரசின் வேறு பொறுப்புக்களில் இருந்தும் நீக்கப்படல் வேண்டுமா ?*

*(d ) கொழும்பு மாவட்ட நீதிபதியின் இம் முடிவுகள் ஜப்பானின் அரசாங்கத்தின் கவனத்திற்கும் அதன் மக்களின் கவனித்திற்கும் கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கையினை முன்வக்கும் படி ஜப்பானிய அரசினை வேண்டுதல் ஆகாதா*

*(e ) இம்மோசடியில் ஈடுபட்ட உள்ளூர் நபர்கள் சட்டத்தின் முன்னிலையில் கொண்டுவரப்பட்டு நீதி நிலைநாட்டப்பட நடவடிக்கை எடுக்கலாகாதா*

*மேற்கூறப்பட்ட காரணங்களை காலதாமதமின்றியும் கட்டாயமாகவும் விசாரிக்கப்பட வேண்டியதாகும், இதனை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சட்டங்களுக்கு விரோதமானது என்ற எண்ணம் வராதபடி அமைத்தல் வேண்டும். இல்லாதுவிடின் குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தாம் மேற்கொண்ட குற்றங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள எந்தவொரு சிவில் நடவடிக்கையினையும் எடுக்கக்கூடும். மேலும் சம்பந்தப்பட்ட முரண்பாடுகளின் தன்மைகளை கவனத்தில் கொள்ளும் போது நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தரவுகளை வேறு சபைகளின் கலந்துரையாடல்களுக்கோ, கருத்தில் எடுக்கப்பட மாட்டாது. இருப்பினும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டதாக கூறப்படும் முரண்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடக்கப்படுமாயின் அது புதிதாகவும் கேலிக்குரிய சட்டமாகவும் எந்தவொரு சிவில் சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருக்கும். சட்டத்தின் முன் நிறுத்துவதானது நீதியினை வேறெந்த வழிமுறையிலாவது கவிழ்ப்பதற்கான மந்திரமாக அமையாது*

*திரு R. பாஸ்கரலிங்கம் அவர்களின் கடிதத்தின் கடைசி பந்தியில் திரு அமரசேகர அவர்கள் இவ்விடயங்களை கவனத்தில் கொண்டுவந்தபோது, கணம் மாவட்ட நீதிபதியினால் வழங்கப்பட தீர்ப்பின் அடிப்படையில் நோக்குகையில் நிதியமைச்சரெடுத்த நடவடிக்கைகள் தொடர்பற்றதாயும் நடைமுறையில் செல்லுபடியற்றதாயும் அமைகிறது.*

*திரு. பாஸ்கரலிங்கம் அவர்களால் அவரது கடிதத்தின் 3 ம் பந்தியில் மாவட்ட நீதிபதியின் தீர்ப்பின் ஒரு வாக்கியத்தினை மேற்கோள்காட்டி, கனம் மாவட்ட நீதிபதியினால் வழங்கப்பட்ட அனைத்து தீர்ப்புக்களும் ஒன்றிணைத்து*

*இங்கனம் உண்மையுள்ள*
*(ஒப்பம்)*
*வாசுதேவ நானாயக்கார , பா.உ*

*பிரதிகள் : 1. கனம். A. C. S. ஹமீது, பா.உ*
*நீதியமைச்சர்*
*உயர்ந்த நீதிமன்ற வளாகம்*
*கொழும்பு - 12*

*2. கனம். சட்ட மா அதிபர்*
*சட்ட மா அதிபர் காரியாலயம்*
*கொழும்பு - 12*

*3. திரு. R. பாஸ்கரலிங்கம்*
*செயலாளர்*
*நிதியமைச்சு*
*செயலகம்*
*கொழும்பு – 1"*

---

*02.12.1992 இல் வாதியான நூலாசிரியரின் முதலாவது வழக்கின் முக்கியமான தீர்ப்பினை வெளிப்படையாக, பார்த்த மாத்திரத்தில் மோசடி நடந்தமைக்கான ஆதாரங்களுடன் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டதன் நிமித்தம் பாரிய அளவிலான அந்நிய செலாவணி நாட்டிலிருந்து பறிக்கப்படுவதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவினை உச்ச நீதிமன்றம், பிறப்பித்ததனை தொடர்ந்து, இலங்கை முதலீட்டு நிறுவனம் 07.12.1992 திகதியிடப்பட்ட தனது கடிதத்தில் (JETRO) பிரதிநிதிகள் குழுவானது கொழும்பு ஹில்டன் ஹோட்டல் இன் இப் "பிரைச்சினைக்கு" தீர்வினை வேண்டி நின்றது.*

*"இலங்கை முதலீட்டு சபை*

*டிசம்பர் 07, 1992*

*திரு. கே. சண்முகலிங்கம்*
*திறைசேரியின் பிரதிச் செயலாளர்*
*பொது திறைசேரி*
*செயலகம்*
*கொழும்பு - 1*

*அன்பின் ஐயா,*

*அண்மையில் எக்ஸ்போ 92 இற்கு தொடர்புடைய (JETRO) பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கைக்கு வருகை தந்தனர். இக்குழுவினரை சந்திக்கும் சந்தர்ப்பம் ஒன்று எனக்கு கிடைக்கப்பெற்றதோடு அவர்களுக்கு தனிப்பட்ட விதமாக JETRO வினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு விருந்தில் பங்குபெறும் சந்தர்ப்பமும் கிடைத்தது.*

*மத்திய உணவுடன் கூடிய இவ் விருதுபசாரத்தில் எமது கருத்துக்களை பரிமாறியதோடு இப்பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திரு.M. சவாகி, ஹில்டன் ஹோட்டல் இன் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வு கிடைக்கும் வரை இலங்கையில் பிரதான ஜப்பானிய முதலீடுகள் இடம்பெறுவது சாத்தியமில்லை என தெரிவித்தார்*

*இது ஜப்பானிய அரச அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு மூத்த ஆலோசகரின் கருத்தில் எடுக்கப்பட வேண்டிய கருத்து என்பதனால் இவ்விடயத்தை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.*

*இங்கணம் தங்களுக்கு உண்மையுள்ள,*
*(ஒப்பம்)*
*M.P.T. குரே*
*நிறைவேற்று அதிகாரி (முதலீடு)*
*இலங்கை முதலீட்டு சபை"*

---

*இருப்பினும் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தினால் நூலாசிரியரின் முதலாவது வழக்கானது எல்லாவிதத்திலும் பாரிய மோசடி இடம்பெற்றமையினை நிரூபிக்கும் வகையில் அமைந்தமையும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவினை உச்ச நீதிமன்றம் உறுதி செய்ததன் நிமித்தமும் பாராளுமன்ற உறுப்பினரும் வாதியான நூலாசிரியரின் நெருங்கிய நண்பருமான சட்டத்தரணி திரு. வாசுதேவ நாணயக்கார அவர்கள் ஜனாதிபதி R. பிரேமதாச அவர்களுக்கு "அரசாங்கம் இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்தது " என வினவி கடிதம் ஒன்றினை அனுப்பினார்.*

*ஜனாதிபதியின் செயலாளர் K.H.J.விஜயதாச, மலைக்கும் விதத்தில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவினை தொடர்ந்த தனது 17.12.1990 திகதியிடப்பட்ட கடிதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டுடன் 05.02.1993 திகதியின் பின்வரும் கடிதமானது இவ்வழக்கில் செல்வாக்கு செலுத்தக்கூடிய அதிகாரங்களுடைய அரசியல்வாதிகளின் தலையீட்டின் விளைவா என்றும் சம்பந்தப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் அழுத்தங்களின் விளைவா எனவும் கேள்விகளை எழுப்புகிறது. மேலும் ஜனாதிபதி R. பிரேமதாச அவர்கள் பிழையாக வழிநடத்தப்பட்டுள்ளாரா அல்லது சரியாக அறிவிக்கப்படவில்லையா எனவும் கேள்விகளை எழுப்புகிறது*

*"ஜனாதிபதி காரியாலயம்*

*பெப்ரவரி 05, 1993*

*கனம் ஐயா,*

*<u>ஹில்டன் ஹோட்டல்</u>*

*தங்களது ஜனவரி 27,1993 திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றதனை உறுதிப்படுத்தும் படியும் குறித்த வழக்கின் தரவுகள் தொடர்பாக உங்களுக்கு விளக்கும் படியும் ஜனாதிபதி அவர்கள் எனக்கு உத்தரவிட்டுள்ளார்*

*இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் தங்களின் முந்திய கடிதங்களுக்கு பதிலளிக்கவில்லை என் தெரிவித்திருந்தீர்கள். இதனை சோதித்ததில் இது உண்மையல்ல என கண்டுகொண்டேன். ஆகஸ்ட் 20, 1993 மற்றும் டிசம்பர் 03, 1993 திகதியிடப்பட்டு தங்களுக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் அனுப்பப்பட்ட பதில் கடிதங்களை தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இதில் இவ்விடயம் தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளரால் எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியும் இணைக்கப்பட்டிருந்தது. தங்களது டிசம்பர் 17, 1991 திகதியிடப்பட்ட கடிதமும் மேற்கூறிய விதத்தில் பதிலளிக்கப்பட்டுள்ள ஏற்கனவே தாங்கள் அனுப்பிய கடிதத்தின் உள்ளடக்கத்தினையே மறுபடியும் கொண்டுள்ளது.*

*தங்களது பதில் கடிதத்திலே, தங்கள் முன்வைக்கும் பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு சான்றாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் குறிப்பன பகுதிகளை மேற்கோள் காட்டவில்லை. எனவே அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இத்தீர்ப்பினை பரிசோதிக்கும்படி பணித்திருக்கிறார். இவ்விடயத்தில் பின்வருமாறு ஜனாதிபதி அவர்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றார். :-*

*(a) பா.உ . K.N.சொக்சி அவர்கள் விடயத்தில், தீர்ப்பில் அவர் குறித்து எந்த கண்டுபிடிப்போ, எந்த ஒரு அவதானமோ அல்லது தீர்ப்போ காணப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவரது பெயரோ அல்லது அவர் தொடர்பான எந்தவிதமான விபரிப்போ தீர்ப்பில் இல்லை. இத்தீர்ப்பில் அவர் எங்கும் காணப்படவில்லை*

*(b ) ஜப்பானிய கட்டட ஒப்பந்தக்காரர் மற்றும் கட்டட வடிவமைப்பாளர் தொடர்பாக எந்த கண்டுபிடிப்போ அல்லது தீர்மானமோ இல்லை, மாறாக பின்வருமாறு நீதிமன்றம் தனது அவதானத்தினை வெளிப்படுத்தியுள்ளது.*

*விவாதமான தரவுகளின் அடிப்படையிலும்,முரண்பாடுள்ள சட்டத்தின் எழுந்தமானமான நிலையிலா தன்மையையும் பார்க்கின்ற போது மனுதாரர் இவ்வாறான ஒரு அறிவிப்பை பெற்றுக் கொள்வாரா என்பது இறுதி தீர்ப்பு வழங்கும் வரை சந்தேகமே*

*(தீர்ப்பின் 7வது பக்கம்)*

*இடைக்கால தடை என்பதற்கு மாறாக மனுதாரர் தன்னுடைய பெறப்பட்ட உரிமை என்னும் பின்னணியில் இந்த அறிவிப்புக்களை நிரந்தரமானதாக எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதானது, எந்த சாட்சியங்களின் அடிப்படையில் கற்றறிந்த மாவட்ட நீதிபதி தீர்ப்பளிப்பார் என்பதில் தான் தங்கியிருக்கும்.*

*(தீர்ப்பின் 10வது பக்கம்)*

*நான் எனக்கு முன்னுள்ள இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கும் கருத்துக்களானது இந்த விசாரணைகளில் எந்தவொரு விடயம் தொடர்பிலோ தரவுகள் தொடர்பிலோ பரிசீலனை செய்யப்படலாகாது என்பதனை என்னால் இயன்றளவு தெளிவாக கூறி வைக்க விரும்புகிறேன்.*

*(தீர்ப்பின் 11வது பக்கம்)*

*ஆகையினாலே நீங்கள் உச்ச நீதிமன்றமானது கூட்டான மோசடி இடம்பெற்றுள்ளதாக வலியுறுத்தும் காரியங்கள், உச்ச நீதிமன்றின் தீர்ப்பில் இருந்து வருகின்ற ஒன்றல்ல என்பதனை உங்களுக்கு அறிவிக்கும்படி அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் எனக்கு பணிப்புரை விடுத்தார்கள். மாறாக உச்ச நீதிமன்றமானது தெளிவாக முரண்பாடான அனைத்து கேள்விகளையும் திறந்த நிலையில் பார்த்ததுடன் விசாரணைகளின்போது மாவட்ட நீதிமன்றானது தீர்ப்பை வழங்க வேண்டும் எனவும் கருதியது, அந்த விசாரணைகள் இன்னும் நடைமுறைப்படுத்தபடவில்லை.*

*இந்த விடயம் தொடர்பில் ஏதேன் விளக்கம் தேவையெனில் என்னை தொடர்பு கொள்ள தயங்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன்*

*உங்கள் விசுவாசமுள்ள,*<br>
*K.H.J. விஜேதாச*<br>
*ஜனாதிபதியின் செயலாளர்*

*திரு.வாசுதேவ நாணயக்கார பா.உ*
*பாராளுமன்ற உறுப்பினர்*
*இரத்தினபுரி மாவட்டம்*
*143/3,கியூ வீதி*
*கொழும்பு 02"*

---

*இதில் காணாமல் போன உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் வாசகமானது யாதெனில் "உத்தரவாதியான அரசாங்கமானது அலட்சியமாக இருந்திருக்கக்கூடாது. இங்கு அலட்சியமாக இருந்த போக்கு மட்டுமன்றி மோசடியான முறையில் தவறுகளை மூடிமறைக்க கூட்டுச்சதியும் இடம்பெற்றுள்ளது. அதேநேரம் இதை உறுதிப்படுத்துவது போன்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மஸாகி குணியசு பின்வரும் கடிதத்தினை 18.02.1993 இல் நிதியமைச்சின் செயலாளர் R. பாஸ்கரலிங்கத்திற்கு நூலாசிரியரான வாதியின் வழக்கினை முடிவுக்குக் கொண்டுவரும்படியும் "இதனை தீர்ப்பதற்கு அதிக காலம் எடுப்பது நிலைமைகளை மேலும் மோசமாக்கும்" எனவும் தெரிவித்து அனுப்பியிருந்தார்.*

*"ஜப்பானிய தூதரகம்*
*இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு*
*20,கிரகரிஸ் வீதி*
*கொழும்பு 07*

*பெப்ரவரி 18,1993*

*திரு. R . பாஸ்கரலிங்கம்*
*செயலாளர்*
*நிதியமைச்சு*
*கொழும்பு 01*

*திரு.பாஸ்கரலிங்கம் அவர்களே,*

*நேற்றைய நாளில் உங்களால் வழங்கப்பட்ட மிகவும் நல்ல மதிய உணவிற்காக மிக்க நன்றி. நாம் கலந்துரையாடிய விடயங்கள் சுவாரஸ்யமானதும் நன்மையானதுமாக இருந்தது. எவ்வாறெனினும் இப்படியான சந்திப்புக்கள் எதிர்வரும் காலங்களில் முன்கூட்டியே நடத்துவதனால் இலங்கை மற்றும் ஜப்பானுக்கு நன்மைபயக்கும் என எதிர்பார்க்கிறேன்.*

*நேற்றைய தினம் நான் கூறிய நிலுவையிலுள்ள வழக்கு தொடர்பில், தாங்கள் ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்குமான பயணத்திற்கு முன்னர் ஒரு நிச்சயமான தீர்வை எடுக்க முடியுமேயானால் மிகவும் மெச்சத்தக்கதாக இருக்கும், ஏனெனில் நீங்கள் நாட்டில் இல்லாதவேளையில் எதுவும் சாதகமாக இடம்பெறாது என நான் கருதுகிறேன்.அத்தோடு தீர்வை எட்டுவதில் தாமதம் அதிகரிக்கும்போது அது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன்.*

*எல்லா வேளையிலும் நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பிற்கு நன்றி.*

*உங்கள் உண்மையுள்ள*

*நஸாகி குன்னியாசு*
*ஜாப்பனீய தூதுவர்"*

---

*இதன் பின்பதாகவே 21.06.1993 இல் நிதியமைச்சு பின்வரும் தீர்வு ஒப்பந்தத்தின் வரைபினை நூலாசிரியரான வாதியின் கவனத்திற்கு அனுப்பியது.*

*"நிதியமைச்சு*

*திரு. நிஹால்.S . அமரசேகர*
*167/4, ஸ்ரீ விபுலசேன மாவத்தை*
*கொழும்பு 10*

*கனம் ஐயா,*

***ஹில்டன் திட்டம்- வரைபு ஒப்பந்தம்***

*இத்தோடு கூட 17 ஜூன் 1993 அன்று திகதி இடப்பட்ட ஒப்பந்த வரிப்புகளின் 1,2,3 ம் இலக்கங்களை உடைய பிரதிகளை இணைத்துள்ளேன்.*

*11/6/93 திகதி இடப்பட்ட குறித்த வரைபு ஒப்பந்தங்களில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அந்த மாற்றங்கள் பச்சை நிறத்தில் நிறமிட்டு காட்டப்பட்டுள்ளன*

*திறைசேரியின் செயலாளர் இந்த வரைபுகள் தொடர்பில் தங்களது கருத்துக்களை இயலுமான விரைவில் பெறுமாறு எனக்கு அறிவுறுத்தல் கொடுத்துள்ளார்.*

*தங்கள் விசுவாசமுள்ள*

*திருமதி. காசி செட்டி*
*இயக்குனர் நாயகம்*
*மனிதவள கொள்கை மற்றும் பொருளாதார விடயங்கள்*
*நிதியமைச்சு"*

---

*இவ்வாறானதொரு தீர்வுக்கு முன்பதாக ஜனாதிபதி R. பிரேமதாச அவர்கள் 1.5.1993 இல் LTTE இனால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார்.*

*அதன்பின், இலங்கைக்கான ஜப்பானிய தூதரகத்தினால் ஜனாதிபதி R.பிரேமதாச அவர்களை தொடர்ந்து பதவியேற்ற ஜனாதிபதி D.B.விஜேதுங்க அவர்களை இவ் ஹில்டன் ஹோட்டல் விடயத்தினை தீர்த்துவைக்கும்படி சம்மதிக்கவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*இந்தப் பின்னணியில் 8.4.1998 இல் G. விஜயசிறி, பொது நிர்வாகி,பொருளாதார விவகாரம், இலங்கை வெளி விவகார அமைச்சு 'ஹில்டன் ஹோட்டல்' என்ற விடயத்தில் முதலீட்டிற்கான உப குழுவின் செயலாளருக்கு ஒரு குறிப்பினை அனுப்பினார், வெளிவிவகார அமைச்சின் தேசிய செயலாளர் R.C.A. வண்டெர்கேர்ட் அவர்களின் 24.3.1994 திகதியிடப்பட்ட குறிப்பின் பகுதியினையும் முன்வைத்திருந்தார் இதில் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக, இலங்கைக்கான ஜப்பானிய தூதரகத்தின் நடைமுறைகளுக்கு பொறுப்பான I.ஹாஷிமோட்டோஅவர்களுடனான கலந்துரையாடல் தொடர்பானதாகும். இதன் உள்ளடக்கங்கள் திகைக்கவைக்கும் படியான அதிர்ச்சிகரமான விடயங்களாகும்.*

**"கடிதத்தின் உள்ளடக்கம்**

*ஏப்ரல் 8, 1994*

*செயலாளர்*
*முதலீட்டிற்கான அமைச்சரவையின் உப குழு*
*முதலீட்டு சபை*
*கொழும்பு - 01*

*ஹில்டன் ஹோட்டல்*

*கொழும்பின் ஜப்பானிய தூதரகத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரி திரு.I. ஹஷிமோட்டோ தேசிய செயலாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் திரு.R.C.A. வண்டெர்கேர்ட் அவர்களை அண்மையில் தொடர்புகொண்டார். இக்கலந்துரையாடலின்போது நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரியானவர் ஹில்டன் ஹோட்டல் முரண்பாடு குறித்து தெரிவித்திருந்தார்*

*திரு. வண்டெர்கேர்ட் அவர்கள் தயாரித்த அவருக்கும் ஜப்பானிய தூதரகத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரிக்குமான கலந்துரையாடலின் குறிப்பின் ஒரு பகுதியினை இத்துடன் அனுப்பி வைக்கிறேன். முதலீட்டிற்கான அமைச்சரவை உப குழுவின் அடுத்த கூட்டத்திலே இது தொடர்பாக கவனம் எடுத்தல் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.*

*(ஒப்பம்)*
*G. விஜயசிறி*
*பொது நிர்வாகி - பொருளாதார விடயங்கள்"*

---

*"செயலாளர்*

*நேற்று மாலை ஜப்பானிய தூதரகத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரி என்னை தொடர்பு கொண்டிருந்தார்.*

*2. பெரும்பாலும் அது நய நாகரீக அழைப்பாக இருந்தபோது அவர் பின்வரும் விடயங்களையும் குறிப்பிட்டிருந்தார். நான் நம்புகிறபடி இவற்றிற்கு உரிய அரச அதிகாரிகளால் ஆழமாக ஆராய்ந்து மாருத்தரம் வழங்கப்பட வேண்டும்.*

*இம் முரண்பாடுகளையும் LTTE உடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக்கான வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக குறிப்பிடும் வேளையில், LTTE இருக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு ஜப்பான் ஓர் நடுநிலைமையான மார்க்கமாக தன்னை முன்வைத்திருந்தால் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவாயிருந்திருக்கும் என சிந்திப்பதாக தெரிவித்தார். இவ்வாறான பேச்சுவார்த்தைகளுக்கு பொதுமக்களின் பார்வையிலிருந்து விலகிய ஓர் சந்திப்பானது பொருத்தமான சொலலாக இருக்கும் என எதிர்பார்க்கின்றார். இவ்விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் கையாள்வதால் இம்முன்மொழிவை அவர்களுக்கு தெரிவித்தால் வேண்டும் என பதிலளித்திருந்தேன்.*

*ஜப்பானிய அரசாங்கத்திற்கும் அதன் முதலீட்டாளர்களுக்கு ஹில்டன் ஹோட்டல் முரண்பாடுகள் குறித்து இருக்கும் அக்கறை குறித்தும் திரு. ஹாஷிமோட்டோ அவர்கள் எனது கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார். வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வகையிலான இலங்கையின் வெளிநாட்டு கொள்கைகளுக்கான முக்கியத்துவத்தின் அடிப்படையில் நோக்குகையில் இலங்கையானது ஹில்டன் ஹோட்டல் முரண்பாடு போன்ற முரண்பாடுகளைக் கையாள்கையில் அது இலங்கை ஜப்பானிய பொருளாதார உறவுகளுக்கு எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்றும், குறிப்பாக ஜப்பானிய முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்படுத்தும் பாதகமான விளைவினை ஏற்படுத்தும் அவர்கள் இலங்கை அரசாங்கமானது இவ்வாறான ஒரு சூழ்நிலையில் முரண்பாடுகளைத் தீர்க்க சரியாக உதவவில்லை என்ற எண்ணப்பாட்டை கொண்டுவரும். இறுதியாக அதிக இழப்பினை அடையப்போவது எமது நாடே என்பதனால் இவாறான சூழ்நிலைகளில் அரசாங்கமானது தனியாருக்கு மத்யஸ்தமளிக்கவோ முதலீட்டு சபையினால் பேச்சுவார்த்தையினை மேற்றக்கொள்ளவோ இடமளிக்காது அரசாங்கம் அதிகளவில் தொடர்புடையதாயிருத்தல் வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். உரிய அதிகாரிகளுக்கு அவரது கருத்துக்களை தெரியப்படுத்துவதாக அறிவித்திருந்தேன்.*

*SS /FA*
*24.3.94*

*பிரதிகள் : DG /PA*
*DG /EA"*

*உண்மையிலேயே அதிசயிக்க வைக்கும் வகையில், ஜப்பானிய அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான (LTTE) பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்ததோடு பொதுமக்களின் வெளிச்சத்திற்கு புறம்பாக இவ்வாறானதொரு பேச்சுவார்த்தை அமைத்தல் ஏற்ற சூழ்நிலையாக அமையும் என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசுக்கும் LTTE இற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு ஜப்பான் ஒரு மார்க்கமாக அமைய முன்வந்தது*

*மேலும் அதிர்ச்சிகரமான அமைந்தது யாதெனில் உதவியொன்றிற்கு பிறிதொரு உதவி பெரும் முன்னேற்பாடான நோக்கில் ஜப்பானிய அரசாங்கத்தினதும் அதற்கும் அதன் முதலீட்டாளர்களினதும் பெரும் கவனத்திற்குள்ளான ஹில்டன் ஹோட்டல் முரண்பாட்டினை தீர்த்துவைக்கும்படி இலங்கை அரசாங்கத்தினை ஆர்வத்தோடு தூண்டியது. அதோடு அவ்வாறு இல்லாத பட்சத்தில் அது ஜப்பான் மற்றும் இலங்கைக்கு மத்தியிலான இருதரப்பு பொருளாதார உறவுகளுக்கு பாதகமாக அமைவதுடன் அதிலும் குறிப்பாக இலங்கையில் ஜப்பானிய முதலீடுகளில் பாதகமான விளைவுகளைக் கொண்டு வரும். இறுதியில் இலங்கையே இழப்புகளை சந்திக்க நேரிடும்.*

*1994ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தோடு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் தன்னுடைய தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய பிரச்சினையாக சித்தரித்த இந்த கூட்டு மோசடியை விசாரிக்கும் முகமாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்தார்.*

*இலங்கை அரசிற்கெதிராக கூட்டான மோசடி இடம்பெற்றிருப்பதை அதிர்ச்சிகரமான தரவுகளுடன் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முன் சாட்சியங்களோடு கொண்டு வந்திருந்த போதும், இராஜதந்திர அழுத்தங்களின் நிமித்தம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களும் குறித்த தீர்வு திட்டங்கள் மேம்படுத்தப்பட்டு முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.*

*சட்டமா அதிபரான சிப்லி அஸீஸ் அவர்களோடும் PLD பிரேமரத்ன அவர்களோடும் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பின்னர் இறுதி தீர்வு ஒப்பந்தமானது முடிவு செய்யப்பட்டு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முன் சமர்ப்பிக்கப்பட்டதோடு அதனை பரிசோதித்த பின்னர் அதனை நடைமுறைப்படுத்த அனுமதி கொடுக்கப்பட்டதுடன், அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் ஜூன் 1995ம் ஆண்டு ஜப்பானின் டைசுய் மற்றும் மிட்சுய் கம்பெனிகளுடன் மனுதாரரான நூலாசிரியருடன் அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி செயலாளர் AS ஜயவர்தன அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*இதன்போது மனுதாரரான எழுத்தாளரின் வலியுறுத்தலின் பேரில் மிட்சுய் அண்ட் கோ,மற்றும் டைசுய் கூட்டுத்தாபனம் என்பன இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்த்த வருமதியான 10 வருட சேர்த்த வட்டியையும் முதலீட்டின் 30 சதவீதத்தினையும் தள்ளுபடி செய்ததோடு, தள்ளுபடி செய்யப்படாத ஏனைய பெறுமதியானது 16 வருடங்களில் குறைந்த வட்டி வீதமான வருடத்திற்கு 5.25 என்னும் அடிப்படையில் மீள்செலுத்தும் படிக்கு மீள் அட்டவணைப்படுத்தியிருந்தது என்பது உறுதியானது. இந்த தள்ளுபடியானது*

*குறித்த ஜப்பானிய நிறுவனங்களை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்த்த 68 சதவீதமான கொடுப்பனவுகளை நிகரானதுடன், அன்றைய பெறுமதியின்படி ஜப்பானிய யென்னில் 17,586 மில்லியனாகவும்,அமெரிக்க டொலரில் 207மில்லியனாகவும் இலங்கை ரூபாவில் 10,200 மில்லியனாகவும் கணக்கிடப்பட்டது.*

*இறுதி கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த நடவடிக்கையானது இலங்கை அரசிற்கும் HDL நிறுவனத்திற்கும் மிகவும் சாதகமாக அமைந்தது என்பதை இலங்கை அரசானது ஏற்றுக்கொண்டது. இந்த தள்ளுபடி AWFDR பெறுமதியானது 30.06.2016ன்படி ரூபா.89,177.3 மில்லியனாகவும் மீளத்தவணைப்படுத்தப்பட்ட பெறுமதியானது ரூபா 51,451.8மில்லியனாகவும் கணிப்பிடப்பட்டது.*

*மேட்கூறப்பட்ட தீர்வினை செய்து முடிப்பதனை அறிவிக்க, இரண்டு நாட்களின் பின் 30.06.1995 அன்று நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஊடக மாநாடு ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது, இது நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான G. L.பீரிஸ் இன் தலைமையில் நடைபெற்றதுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனாநாயகே, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மஸாகி குனியாசு, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் A.S.ஜெயவர்த்தேனே அவர்களுடன் வாதியான நூலாசிரியரும் இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.*

*இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் GL பீரிஸ் அவர்கள் தவறான முறையில் ஒப்பந்தத்திற்குக்கான முழு நற்பேறையும் தான் பெற முயற்சித்தோடு, பின்வருமாறு ஊடகங்களுக்கு தெரிவித்தார்.*

> *"பல வருடங்களாக மிக நெருங்கிய உறவை கொண்டிருந்த ஜப்பான் இலங்கை உறவுகளுக்கு தொடர்ச்சியான தடங்கலாக இருந்த அல்லது அந்த உறவை முறிக்கக்கூடிய இந்த விடயம் தொடர்பில் இன்று செய்யப்பட்ட இந்த ஒப்பந்தின் நிமித்தம் இன்று இவ்விரு அரசுகளுக்கும் மிகவும் மகிழ்ச்சியான ஒரு நாளாகும். அதுபோலவே ஜப்பானிய நிறுவனங்களான மிட்சுய் மற்றும் டைசுய் கம்பெனிகளின் நற்பெயரையும் இதன் மூலம் பாதுகாத்துள்ளோம். இந்த ஒப்பந்தமானது ஜப்பானிய முன்னாள் தூதுவர் மஸாகி குன்னியாசு அவர்களதும் தற்போதைய தூதுவர் யசுவோ நகுச்சி அவர்களும் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் விளைவாக பெறப்பட்ட ஒன்றாகும்."*
>
> *"ஜப்பானிய கம்பெனிகளுடனான இந்த ஒப்பந்தமானது பொது மக்கள் முன்னணி அரசாங்கத்தின் பொது வளங்களுக்கெதிரான ஊழல் மோசடியை இல்லாதொழிக்கும் தேர்தல் விஞ்சாபணத்திற்கு அரசாங்கத்தின் ஈடுபாட்டை காட்டுவதோடு, எவ்வாறெனினும் இந்த உடன்படிக்கையானது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊழல் மோசடிக்கு எதிரான எந்தவொரு சட்ட நடவடிக்கை பொறிமுறைக்கும் தடையாக இருக்காது"*

*ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வியக்கும் வகையில் பின்வருமாறு தெரிவித்தார்.*

> *"இத்தீர்ப்பின் முடிவானது நல்லுறவுடன் காணப்பட்ட எமது இரு நாட்டிற்கும் இடையில் ஏற்பட்ட உறுத்தல்களைக் கலைந்துள்ளது. நம் அனைவரது கவனத்திலும் இருந்த ஓர் அத்தியாயம் நிறைவுக்கு வந்துள்ளமையை காண்பது இது எமக்கு மகிழ்ச்சிகரமான ஒரு நிகழ்வாகும்,"*

*இதனைத்தொடர்ந்து அப்போதைய ஜப்பானிய தூதுவர் யசுவோ நொகுச்சி 27.4.1997 இன் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இது குறித்து" ஹில்டன் விவகாரமானது பொருளாதார உறவுகளில் ஏற்பட்ட 'முள்', அத்தோடு இலங்கையில் முதலீடு செய்தால் எவ்வாறான சிக்கல்களை ஜப்பானியர் எதிர்நோக்குவர் என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்" என தெரிவித்திருந்தார்*

*அதிர்ச்சிகரமான முறையில் அமைச்சர்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும், இறையாண்மை மிக்க ஒரு நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் எதிராக இடம்பெற்ற பாரிய அளவிலான மோசடியானது வெறுமனே "உறுத்துதலாகவும்" "அவர்கள் பக்கத்தில் முள்ளாகவும்" அமைந்தது. இலங்கையின் வறிய மக்களுக்கோ ஜூன் 1995 இன்படி இதன் பெறுமதி அமெரிக்க டொலர் 207 மில்லியன் ஆகும். இந்த பிரகாரமாகவே மக்களின் வளங்களின் மீதான அவர்களது பொறுப்புத்தன்மை வெளியேற்றப்பட்டதுடன் , வறிய மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன*


*அதன்பின்னர் 1996ம் ஆண்டு மே மாதம் மறுக்கமுடியாத குற்ற ஆதாரமொன்று விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் உறுதிப்படுத்தப்பட்டது. உண்மையான கட்டிட வரைபிலிருந்த குறுக்கு பகுதி தாள்கள் நீக்கப்பட்டு புதிய குறுக்கு பகுதி தாள்கள்உட்சேர்க்கப்பட்டிருந்ததனையும் குறித்த இரண்டு மாடிகளுக்கான புதிய ஏற்றத்தினையும், உண்மையான வரைபில் இருந்த அடித்தள தாள்கள் இல A -01 முதல் A -07 நீக்கப்பட்டு A -08 லிருந்தே தாள்கள் காணப்பட்டமையும் சந்தேகத்திற்கிடமின்றி விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டது.*

*மாடி வரைபு தாள்களில் காட்டப்பட்டிருந்த ஏற்றங்களானது குறுக்கு பகுதி தாள்களில் காட்டப்பட்டிருந்த ஏற்றங்களோடு ஒவ்வாமையானதும் மாடிகளின் உயரமானது 3மீட்டரிலிருந்து 2.9மீட்டர் வரை குறைக்கப்பட்டடிருந்ததும் உண்மையான கட்டிட வரைபானது மாற்றப்பட்டு புதிய வரைபு உருவாக்கப்பட்டமைக்கான குற்றம் நடந்ததை உறுதிப்படுத்தும் சவாலுக்குட்படுத்த முடியாத ஆதாரமாக அமைந்தது.*

*சரியான தள வரைபு*
*A – 28*





*மோசடியான தள வரைபு*
*A – 29*





*இந்த புதிய வரைபு உருவாக்கத்தால் 3ம் 4ம் மாடிகள் 24.5மீட்டர் ஏன்டா அதே உயரத்தில் காட்டப்பட்டிருந்தாலும் 19ஆவது மாடியும் அதன் கூரையும் முறையே 72.7மீட்டர் மற்றும் 72.0/72.5 ஆக காட்டப்பட்டிருந்தது, ஆனால் 19ஆவது மாடியின் கூரையானது 19ஆவது மாடிக்கு கீழே சித்தரிக்கப்பட்டிருந்தது.*


*3ம் தளம்*





*4ம் தளம்*





*மோசடியான 18ம் தளம்*





*நீக்கப்பட்ட மோசடியான 19ம் தளம்*




*மொட்டை மாடியின் சில தள மட்டங்கள் - 72.0 மீட்டர் / 72.5 மீட்டர்*








மேற்குறிப்பிட்ட சவாலுக்குட்படுத்த முடியாத குற்றவியல் ஆதாரங்களின் முன்னிலையில் வெளிப்படையாக இப்படியான உள்ளார்ந்த ஒரு கட்டிட வரைபை நகர அபிவிருத்தி அதிகார சபையானது அனுமதிக்க முடியாது என விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவானது கண்டறிந்தது.

கட்டிட வரைபிலே காட்டப்பட்டிருந்த உயரங்களானது உண்மையான கட்டிட வரைபிலே காட்டப்பட்டிருந்த உயரங்களுக்கு அச்சொட்டாக இருந்தமையானது ஹில்டன் ஹோட்டலின் உண்மையான வரைபானது மாற்றியமைக்கப்பட்டு புதிய வரைபு கொண்டு வரப்பட்ட குற்ற செயலை நிச்சயப்படுத்தும் சான்றாக அமைந்தது. அடித்தள வரைபின் தாள்கள் நீக்கப்பட்டிருந்தது பின்வரும் விளக்கப்படங்களை அவதானிக்க.




*Perspectives, Cross-sectional & Floor Layout Sheets as per Project Plans for Colombo Hilton Hotel*



மேலே குறிப்பிடப்பட்ட அப்பட்டமான பித்தலாட்டமும் அதன் விளைவாக உண்மையான கட்டிட வரைபின் பிரகாரம் ஹில்டன் சர்வதேச நிறுவனம் எதிர்வு கூறியிருந்த இலாபத்தில் ஏற்பட்ட பாதக விளைவுகளையும் மீள் சமர்ப்பிக்கப்பட்ட வரைபின் பகுதிகளோடும் தரவுகளோடும் இப்புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

அது மாத்திரமன்றி, இந்த கட்டிட வரைபுகள் தொடர்பில் மனுதாரரான நூலாசிரியரின் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் பதியப்பட்ட மனுவின் அடிப்படையில் விசாரணை செய்த செல்டன் விஜேரத்ன பட்டய கட்டட நிபுணர் குழுமத்தின் அறிக்கையும் இந்த குற்றம் இடம்பெற்றதை வலுப்படுத்தும் மேலதிக சான்றாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சமர்ப்பணமானது.

இது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை ஆச்சரியத்திற்குள்ளாகியதுமல்லாமல், நகர அபிவிருத்தி அதிகாரசபையானது இப்படியான ஒரு வரைபை எவ்வாறு அனுமதிக்கலாம் என கேள்வியெழுப்பியதுடன், ஒருபோதும் நகர அபிவிருத்தி அதிகார சபை அப்படி செய்திருக்கலாகாது எனவும் தெரிவித்தது. பின்னர் அப்படியான ஒரு குற்றம் நடந்ததை ஒப்புக்கொண்ட நகர அபிவிருத்தி சபையானது உண்மையான ஹில்டன் ஹோட்டல் வரைப்பிலிருந்த அளவுகளுக்கேற்ப சரியான அளவீடுகளை குறிக்கும் வகையில் புதிய வரைபொன்றை தயாரித்தது.

மேற்குறித்த குற்றங்கள் உண்மையாகவும் ஆணித்தரமாகவும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நிரூபிக்கப்பட்ட்ட போது இந்த ஜப்பானிய கம்பனிகள் அவற்றுக்கு தெளிவான விளக்கத்தை கொடுக்க முடியாமல் போனதுமன்றி, ஜப்பானிய கட்டிட கலை கம்பெனிகளான காங்கோ கிகாகோ சேகெய்சா, யோசோ சிபட்டா குழுமத்திற்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எல்.சி.செனெவிரட்னெ இந்த கம்பெனிகளுக்காக தான் இனிமேல் ஆஜராகமாட்டேன் என ஆணைக்குழுவிற்கு தெரிவித்தார்.

மேற்குறித்த பின்னணியில், இலங்கை அரசாங்கமானது ஒப்புக்கொண்ட தீர்வு ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் தாமதம் காட்டியமையானது, ஜப்பானிய அரசானது தனது அதிருப்தியை வெளிக்காட்டும் நிலைக்கு வந்தது. இதனை தொடர்ந்து ஜப்பானிய அரசானது, 1996ம் ஆண்டு நவம்பர் நடைபெற்ற உதவி வழங்கும் குழு கூட்டத்தில் இலங்கைக்கு கொடுக்கப்படவிருக்கும் 245மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியானது தீர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வருமளவும் கொடுக்கப்படாது எனவும் நடைமுறைப்படுத்தப்படாத பட்சத்தில் பொருத்தனை செய்யப்பட்ட நிதியுதவி வழங்கப்படாது எனவும் அழுத்தங்களை பிரயோகித்தது.

இந்த பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இடையீட்டாலும் அவர் வேண்டுகோளுக்கிணங்கவும் நூலாசிரியரான மனுதாரரின் அனுமதியோடு அப்போதைய திறைசேரி செயலாளர் B C பெரேரா மற்றும் அன்றைய சட்டமா அதிபரான சரத் N சில்வா ஆகியோரால் 1996ம் ஆண்டு அக்டோபர் மாதம் தீர்வு உடன்படிக்கையில் "முன் விதிமுறைகள்" என்ற பதத்திற்கு பதிலாக "பின்னான விதிமுறைகள்" என்ற மாற்றம் செய்யப்பட்டு அதனை இலங்கை அரசு முற்றாக ஏற்றுக்கொண்டதன் அடிப்படியில் உள்ளீடுகள் செய்யப்பட்டன. ஆதாரம் : உள்ளீடுகளின் பகுதிகள்.

> “மேற்குறிப்பிட்ட தீர்வு உடன்படிக்கை தொடர்பில் காணப்பட்ட தாமத்தினை குறித்து அரசாங்கமானது கரிசனை கொண்டுள்ள அதேவேளை, ஜப்பான் இலங்கை உறவுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவகையில் இதனை முன்னெடுத்து செல்ல அரசானது விரும்புகிறது”
>
> “இலங்கை அரசானது இந்த அடிப்படையில் திரு அமரசேகர அவர்களது அனுமதியோடும் கருத்துக்களோடும் 1ம் 2ம் தீர்வு உடன்படிக்கையையும் 3ம் 4ம் உடன்படிக்கைகளிலே இங்கே குறிப்பிட்ட பகுதிகளை மாத்திரமும் நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவிக்கிறது. குறித்த தரப்புகளாலும் இடையிலும் 3ம் 4ம் தீர்வு உடன்படிக்கைகளிலே உள்ள சரத்துக்கள் தொடர்பில் பொருத்தமான சட்டங்களின் கீழ் இலனாகி அரசானது தேவையான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என புரிந்துணர்வு இருந்தது.”

அதற்கமைய குறித்த உள்ளீடானது இலங்கை அரசின் சார்பில் திறைசேரி செயலாளரினாலும் நூலாசிரியரான மனுதாரரினாலும் மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபனங்களாலும் கைச்சாத்திடப்பட்டன. இலங்கை அரசின் வற்புறுத்தல் மற்றும் தொடர்ச்சியான இரங்களின் நிமித்தம் குறித்த இரண்டு வழக்குகள் இரண்டிலும் நூலாசிரியரான மனுதாரர் முடிவிற்கு கொண்டுவந்து இலங்கை அரசின் வற்புறுத்தலின் பேரில் நவம்பர் 1996இற்கு முன்னர் விலக்கிக்கொண்டார் .

நூலாசிரியரின் வற்புறுத்தலின் பேரில் மேற்குறித்த உள்ளீட்டில் ஒரு அங்கமாக மிட்சுய் மற்றும் டைசுய் நிறுவனங்கள் திறைசேரியின் செயலாளருக்கு HDL மீதான தங்கள் பங்குகளின் மீது வாக்குரிமை உட்பட சாலா அதிகாரங்களையும் கொடுத்திருந்தன மேற்குறித்த இந்த முயற்சிகளில் அப்போதைய பிரதி திறைசேரி செயலாளர் P B ஜயசுந்தர நேரடியாக நூலாசிரியரான மனுதாரரோடு இந்த வழக்குகளை வாபஸ் பெறுமாறு நேரடியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதோடு, 25.10.1996 அன்று HDL இயக்குனர்

சபையின் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடாத்தினார் அக்கூட்ட அறிக்கையின் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"தலைவர் P.B ஜயசுந்தர அவர்கள் இந்த கூட்டமானது இலங்கை ஜப்பான் உறவுகள் தொடர்பிலான தேசிய முக்கியத்துவம் மிக்க ஒன்று எனவும் இக்கூட்டத்தை அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில் தான் நடாத்துவதாகவும் அனைத்து இயக்குனர்களையும் கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்களின் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டும் வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார். இதனை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்."*

இதன் பிறகு, நூலாசிரியர் தனது வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொண்டதன் அடிப்படையில், ஏலவே மனுதாரரான நூலாசிரியரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால தடையுத்தரவின் நிமித்தம் சேர்ந்திருந்த அமெரிக்க டொலர் 30 மில்லியனில் 29 மில்லியனை ஜப்பானிய அரசாங்கத்தின் ஏற்ப நவம்பர் 1996ல் நடைபெறவிருந்த உதவி வழங்கும் குழு கூட்டத்திற்கு முன்னர் ஹில்டன் ஹோட்டலின் உரிமை நிறுவனமான HDL மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுதாபனங்களுக்கு செலுத்தியது.

***"கடிதம்***

*பொது திறைசேரி*

*அரச கணக்குகள் திணைக்களம்*

*அக்டோபர் 29,1996*

*பிரதான முகாமையாளர்*
*அந்நிய செலாவணி வங்கிப்பிரிவு*
*இலங்கை வங்கி (7ம் மாடி)*
*கொழும்பு - 01*

*அன்புள்ள ஐயா,*

***<u>ஹோட்டல் டெவெலபேர்ஸ் லங்கா லிமிடெட்</u>***

*டோக்கியோ தலைமை காரியாலயம் 3-2, நிஹோன்பவ் ஹொங்கொகுசோ 1- சோம், சோ-கு, ஜப்பான் எனும் விலாசத்தில் அமைந்துள்ள டோக்கியோ மிட்சுபிஷி லிமிடெட் வங்கியின், மிட்சுய் அண்ட் கோ லிமிடெட் ( 2-1, ஒதெமோச்சி, 1- சோமோ, சியோடா கு, டோக்கியோ, ஜப்பான்) இன் கணக்கு இலக்கமான : 0014710 இற்கு ஜப்பானிய யென் 644,492,640 இணை தந்தி பரிமாற்றம் மூலம் பரிமாற்றம் செய்யும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்*

*திறைசேரியின் உப செயலாளரின் பெயரில் அழைப்பு கணக்கில் இப்பரிமாற்றத்தினை வரவு வைக்க.*

*இங்கணம் உண்மையுள்ள,*

*P.I. லியனகே*
*திறைசேரியின் உபசெயலாளர்*

*P. பாலசுப்ரமணியம்*
*அரச கணக்கின் பொது நிர்வாகி*

*பிரதி : ஹோட்டல் டெவெலபேர்ஸ் இலங்கை லிமிடெட்"*

---

***"கடிதம்***

*பொது திறைசேரி*

*அரச கணக்குகள் திணைக்களம்*

*அக்டோபர் 29, 1996*

*முகாமையாளர், வைப்புகள்*
*ஹொங்கோங் மற்றும் ஷாங்காய் வங்கிகளின் கூட்டுநிறுவனம்*
*24, சார், பரோன் ஜயதிலக்க மாவத்தை*
*கொழும்பு - 01*

*அன்புள்ள ஐயா,*

*ஹோட்டல் டெவெலபேர்ஸ் லங்கா லிமிடெட்*

*டோக்கியோ தலைமை காரியாலயம் 3-2, நிஹோன்பவ் ஹொங்கொகுசோ 1- சோம், சோ-கு, ஜப்பான் எனும் விலாசத்தில் அமைந்துள்ள டோக்கியோ மிட்சுபிஷி லிமிடெட் வங்கியின், மிட்சுய் அண்ட் கோ லிமிடெட் ( 2-1, ஒதெமோச்சி, 1- சோமோ, சியோடா கு, டோக்கியோ, ஜப்பான்) இன் கணக்கு இலக்கமான : 0014710 இற்கு ஜப்பானிய யென் 1,050,039,418 இணை தந்தி பரிமாற்றம் மூலம் பரிமாற்றம் செய்யும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்*

*திறைசேரியின் உப செயலாளரின் பெயரில் நிலையான வைப்பு 001-223114-232 இணையும் 001-223114-235 இணையும் வரவு வைத்து இப்பண மரிமாற்றத்தினை மேற்கொள்க*

*இங்கணம் உண்மையுள்ள,*

*P.I. லியனகே*
*திறைசேரியின் உபசெயலாளர்*

*P. பாலசுப்ரமணியம்*
*அரச கணக்கின் பொது நிர்வாகி*

*பிரதி : ஹோட்டல் டெவெலபேர்ஸ் இலங்கை லிமிடெட்"*

---

***"கடிதம்***

*பொது திறைசேரி*

*அரச கணக்குகள் திணைக்களம்*

*நவம்பர் 14, 1996*

*முகாமையாளர், வைப்புகள்*
*ஹொங்கோங் மற்றும் ஷாங்காய் வங்கிகளின் கூட்டுநிறுவனம்*
*24, சார், பரோன் ஜயதிலக்க மாவத்தை*
*கொழும்பு - 01*

*அன்புள்ள ஐயா,*

*ஹோட்டல் டெவெலபேர்ஸ் லங்கா லிமிடெட்*

*டோக்கியோ தலைமை காரியாலயம் 3-2, நிஹோன்பவ் ஹொங்கொகுசோ 1- சோம், சோ-கு, ஜப்பான் எனும் விலாசத்தில் அமைந்துள்ள டோக்கியோ மிட்சுபிஷி லிமிடெட் வங்கியின், மிட்சுய் அண்ட் கோ லிமிடெட் ( 2-1, ஒதெமோச்சி, 1- சோமோ, சியோடா கு, டோக்கியோ, ஜப்பான்) இன் கணக்கு இலக்கமான : 0014710 இற்கு ஜப்பானிய யென் 933,572,859 இணை நேரடியாக பரிமாற்றம் செய்யும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்.*

*திறைசேரியின் உப செயலாளரின் யென் கணக்கினை வரவு வைத்து இப்பரிமாற்றத்தினை மேற்கொள்க*

*இங்கணம் உண்மையுள்ள,*

*P.I. லியனகே*
*திறைசேரியின் உபசெயலாளர்*

*P. பாலசுப்ரமணியம்*
*அரச கணக்கின் பொது நிர்வாகி*

*பிரதி : ஹோட்டல் டெவெலபேர்ஸ் இலங்கை லிமிடெட்*
*நாணயக்கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான பொது நிர்வாகி"*

---

**“கடிதம்**

பொது திறைசேரி

*அரச கணக்குகள் திணைக்களம்*

*அக்டோபர் 29, 1996*

*முகாமையாளர், வைப்புகள்*
*பேங்க் இன்டெசுஸ்*
4, *ஜினசேன கட்டடம்*
*ஹுனுப்பிட்டிய வீதி*
கொழும்பு - 02

*அன்புள்ள ஐயா,*

ஹோட்டல் டெவெலபேர்ஸ் லங்கா (லிமிடெட்)

*டோக்கியோ தலைமை காரியாலயம் 3-2, நிஹோன்பவ் ஹொங்கொகுசோ 1- சோம், சோ-கு, ஜப்பான் எனும் விலாசத்தில் அமைந்துள்ள டோக்கியோ மிட்சுபிஷி லிமிடெட் வங்கியின், மிட்சுய் அண்ட் கோ லிமிடெட் ( 2-1, ஒதெமோச்சி, 1- சோமோ, சியோடா கு, டோக்கியோ, ஜப்பான்) இன் கணக்கு இலக்கமான : 0014710 இற்கு ஜப்பானிய யென் 443,550,134 இணை தந்தி பரிமாற்றம் மூலம் பரிமாற்றம் செய்யும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்.*

*திறைசேரியின் உப செயலாளரின் பெயரில் நிலையான அழைப்பு இலக்கம் 12276-100-00-78 இணை வரவு வைத்து இப்பரிமாற்றத்தினை மேற்கொள்க.*

*இங்கணம் உண்மையுள்ள,*

P.I. *லியனகே*
*திறைசேரியின் உபசெயலாளர்*

P. *பாலசுப்ரமணியம்*
*அரச கணக்கின் பொது நிர்வாகி*

*பிரதி : ஹோட்டல் டெவெலபேர்ஸ் இலங்கை லிமிடெட்”*

---

**“கடிதம்**

பொது திறைசேரி

*அரச கணக்குகள் திணைக்களம்*

*நவம்பர்* 14, 1996

*முகாமையாளர், வைப்புகள்*
*ஹொங்கோங் மற்றும் ஷாங்காய் வங்கிகளின் கூட்டுநிறுவனம்*
24, *சார், பரோன் ஜயதிலக்க மாவத்தை*
கொழும்பு - 01

*அன்புள்ள ஐயா,*

ஹோட்டல் டெவெலபேர்ஸ் லங்கா லிமிடெட்

*டோக்கியோ தலைமை காரியாலயம்* 3-2, *நிஹோன்பவ் ஹொங்கொகுசோ* 1- *சோம், சோ-கு, ஜப்பான் எனும் விலாசத்தில் அமைந்துள்ள டோக்கியோ மிட்சுபிஷி லிமிடெட் வங்கியின், மிட்சுய் அண்ட் கோ லிமிடெட்* ( 2-1, *ஒதெமோச்சி,* 1- *சோமோ, சியோடா கு, டோக்கியோ, ஜப்பான்) இன் கணக்கு இலக்கமான* : 0014710 *இற்கு ஜப்பானிய யென்* 38,396,501 *இணை நேரடியாக பரிமாற்றம் செய்யும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்.*

*திறைசேரியின் உப செயலாளரின் யென் கணக்கினை வரவு வைத்து இப்பரிமாற்றத்தினை மேற்கொள்க*

*இங்கணம் உண்மையுள்ள,*

P.I. *லியனகே*
*திறைசேரியின் உபசெயலாளர்*

P. *பாலசுப்ரமணியம்*
*அரச கணக்கின் பொது நிர்வாகி*

*பிரதி : ஹோட்டல் டெவெலபேர்ஸ் இலங்கை லிமிடெட்*
*நாணயக்கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான பொது நிர்வாகி"*

---

*மேலதிகமாக, மீளட்டவணைப்படுத்தப்பட்ட* 16 *வருடங்களில் குறைக்கப்பட்ட வருட வட்டி வீதமான* 5.25% *செலுத்தப்படவேண்டிய மிகுதி கடன் தொகை தொடர்பில் இலங்கை அரசல்லாது* HDL *நிறுவனமானது* 16 *திகதியிடப்பட்ட பொருத்தனைகளை மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கியது.*

*மேற்குறித்த உள்ளடக்கமானது* 21.10.1996*அன்று கைச்சாத்திடப்பட்டதுடன் மனுதாரரான நூலாசிரியர் தனது இரண்டு வழக்குகளையும்* 23.10.1996 *அன்று முடிவிற்கு கொண்டு வந்ததோடு,* 25.10.1996 *அன்று இடம்பெற்ற* HDL *இந்த இயக்குனர் சபை கூடியதோடு* 28.10.1996 *அன்று மிட்சுய் மற்றும் டைசுய் கம்பெனிகளுக்கான கொடுப்பனவானது மனுதாரரான நூலாசிரியரினால் பெறப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவினால் சேர்க்கப்பட்ட அமெரிக்க டொலர்* 30 *மில்லியனிலிருந்து கொடுக்கப்பட்டமையானது, அரசாங்கமானது காட்டிய அவசரத்தையும் அதற்கு மனுதாரரான நூலாசிரியர் ஒத்துழைத்தமையையும் காட்டுகிறது.*

HDL *லிலே அப்படியாக சேர்க்கப்பட்ட அமெரிக்க டொலர்* 30 *மில்லியன் அமெரிக்க டொலரானது, அரசாங்கத்தின் கோரிக்கைகேற்ப மனுதாரரான நூலாசிரியர் செயற்படாமல் இருந்திருந்தால், மிக இலகுவாக தனது இரண்டு வழக்குகளையும் வென்றிருப்பதுடன்,மேலும் அதிக பணத்தை* HDL *இற்கு சேர்ந்திருக்கும்: அத்தோடு கூட உச்ச நீதிமன்றினால் உறுதியாக்கப்பட்டபடி இரண்டு வழக்குகளில் வென்று பின்னர் வியாபார அடிப்படையில் மிட்சுய் மற்றும் டைசுய் கம்பனிகளுக்கு கொடுப்பணுவக்காளி செய்திருப்பதால் மூலம் அரசாங்கம் வழங்கிய உத்தரவாதத்தினை இல்லாமல் செய்திருக்கலாம்*

*அரசாங்கத்தின் கோரிக்கைக்கேற்ப அவர் செயற்பட்டிருக்காவிடின், இன்று* HDL *ன் பிரதான பங்குதாரராக இலங்கை அரசாங்கமல்லாது மனுதாரரான நூலாசிரியர் இருந்திருப்பார், ஏனெனில் மிட்சுய் மற்றும் டைசுய் நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அரச உத்தரவாதத்தை இல்லாமல் செய்யும் முழு அதிகாரமும் மனுதாரரான நூலாசிரியரிடமே இருந்தது, எனினும் ஜப்பானிய அரசாங்கத்தின் மேற்குறித்த அழுத்தங்களின் காரணாமாக இலங்கை அரசாங்கமானது அவரை கேட்டுக்கொண்டதிற்கிணங்க அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று அவர் செயற்பட்டார்.*

*இலங்கை மக்கள் மீதும் அரசாங்கத்தின் மீதும் இந்த ஜப்பானிய கம்பெனிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த கூட்டு மோசடியில் விசேடமாக இவர்களுக்கு வழங்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வழக்கின் போது தான் முகங்கொடுக்க இடுக்கண் மற்றும் அழுத்தங்கள் உட்பட சமூக அரசியல் வல்லமை படைத்தவர்களின் நடத்தை தொடர்பிலும் ஆதாரங்களோடு மிக தெளிவாக இங்கே மனுதாரரான நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.*

*அவ்வாறான மோசடியாக நடந்துகொண்டவர்களில் ஒருவராக, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உச்ச நீதிமன்றில் சந்திரிகா குமாரதுங்கவின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க தாக்கல் செய்திருந்த வழக்கில் ஜனாதிபதி பிரேமதாசாவின் சிரேஷ்ட்ட சட்டத்தரணியாக ஆஜராகியிருந்த* K.N. *சொக்சி ஜ.ச . பா.உ இருந்தார்.*

KN சொக்சி அவர்கள் HDL இயக்குனராக இருந்ததோடு தவறிழைத்தவராக காணப்பட்டு அந்த தவறுகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் கண்டிக்கப்பட்டு உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மாறாக ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு பின் பதவியேற்ற D.B. விஜேதுங்க ஜனாதிபதியின் அரசாங்கத்தில் அரசியல்யாப்பு விடய அமைச்சராக நியமிக்கப்பட்டார் .

இந்த வழக்கு நடவடிக்கையின் போது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவானது விசாரணைகளைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மோசடியில் ஈடுபட்ட குற்றத்தின் பேரில் பா.உ. K.N.சொக்சி அவர்களுக்கு காரணங்கள் வழங்கும் படியான அறிவிப்பினை வழங்கியிருந்தது. சட்டத்தரணிகளுக்கான உச்ச நீதிமன்றின் விதிகளை மேற்கோள்காட்டி, பிழையான உண்மைக்கு புறம்பான பொய் தகவல்களை தனது எழுத்து மூல சமர்ப்பணத்தில் கொடுத்திருந்த திரு.கே.என்.சொக்சி அவர்களை கண்டித்திருந்தது.

அதிர்ச்சிகரமான முறையில் ரணில் விக்ரமசிங்க அவர்கள் 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் K.N. சொக்சி அவர்களை இலங்கையின் நிதியமைச்சராக நியமித்திருந்தார். இந்த நியமனமானது சூழ்ச்சிகரமான முறையில் வரி பொதுமன்னிப்பென்ற போர்வையில் முற்றான பொது மன்னிப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற வழிவகுத்தது, இதனை எதிர்த்து போராட்டத்தை நூலாசிரியர் நடாத்தியமையானது, ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்கூட்டியே பொது மக்களின் கருத்து சேர்க்கப்பட்டு வைக்கப்பட்ட பொதுத் தேர்தலில் அரசாங்கம் வீழ்ச்சி காணும்படி செய்தது.

நூலாசிரியரின் வற்புறுத்தலின் பேரில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் மேற்குறித்த பொதுமன்னிப்பு சட்டமூலத்தை உச்ச நீதிமன்றின் ஆலோசனைக்காக அனுப்பி வைத்தபோது, 5பேர் அடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர் குழு முன்னிலையில்,தனிப்பட்ட முறையில் ஆஜராகி நீண்ட சர்ப்பணங்களை நூலாசிரியர் செய்தபோது, உச்ச நீதிமன்றானது, இந்த சட்ட மூலமானது,சட்ட அமுலாக்கத்திற்கு விரோதமானது எனவும், உலகளாவிய மனித உரிமைகள் சாசனம் , சிவில் மற்றும் அரசியல் தொடர்பிலான சர்வதேச உடன்படிக்கை என்பவற்றை மீறுவதாகவும், பொது மக்களின் வருமானத்தை அபகரித்ததாகவும் அரசிற்கு பாரிய இழப்பை கொண்டு வந்த ஒன்றாகவும் கருதியது.

முரணான நடத்தைகள் வெளிப்படுத்தப்பட்ட இன்னொமொரு நபராக நீதியமைச்சர் G.L. பீரிஸ் காணப்படுகிறார், ஏனெனில் இவர் இந்த தீர்வு ஒப்பந்தங்களை நல்லதாக போற்றி அதற்கான பலனை தான் பெற முயற்சித்த போதும், பின்னர் அது தனக்கு பாதகமாக அமையும் என்பதனை கண்டறிந்தபோது, தான் போற்றிய அதே தீர்வு ஒப்பந்தத்தை விமர்சித்தமையானது, HDL மேலதிக நிதி மறுசீரமைப்பிற்கு பாரிய தடையாக அமைந்ததோடு HDL பாரிய நிதி நெருக்கடிக்கு முகக்கிக்கொடுக்கவும் காரணமாகிற்று.

G.L. பீரிஸ் அவர்களுக்கு எதிராக நூலாசிரியரினால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளிலும், குறுக்கு விசாரணைகளுக்கு அவரால் பதிலளிக்கமுடியாமல் போனதுமன்றி, அவரின் அதிகாரத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் கீழிருந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்க முடியாமல் போனது, தீர்க்கப்பட்டதன் பின்னர் நூலாசிரியரினால் இவ்விரு வழக்குகளும் கிடப்பில் போடப்பட்டன.

தீர்வு உடன்படிக்கை எப்படியாயினும் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூற்றுப்படி 2000ம் ஆண்டு வரைபு அரசியல் சாசனத்திற்கு ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவை பெற்றுத்தருவார் என உறுதி அளித்த K.N. சொக்சி ஜ ச. பா.உ அவர்களை பாதுகாக்கும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இடைப்பட்டு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையை நீடிப்பதை தடை செய்தார், எவ்வாறெனினும் 2000ம் ஆண்டு அரசியல் சாசனம் நிறைவேற்றப்படாமல் பேரழிவில் முடிந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் மேற்குறித்த கூட்டு மோசடி சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை நடாத்தி குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டார். இதுவும் சமூக அரசியல் அழுத்தங்களினாலும் ஆதிக்கங்களினாலும் தடைப்பட்டமையானது சமூக அரசியல் உண்மைகளை வெளிக்காட்டியது.

இந்த விடயத்தில் மக்களுக்கு உண்மையாக இருக்கவேண்டிய இன்னொமொரு முக்கியமான நபர் ஆனால் அதற்கு விரோதமாக செயற்பட்டவராக வெளிவிவகார அமைச்சர் ஜ.ச. லக்ஷ்மன் கதிர்காமர் இதனை மிகவும் சிறிய விடயமாக கருதி இலங்கை அரசிற்கும் அதன் மக்களிற்கும் எதிராக நடாத்தப்பட்ட இந்த கூட்டு மோசடியானது வெறுமனே ஒரு "கருத்து முரண்பாடாகவும்" ஜப்பானிய இலங்கை உறவிற்கு ஒரு பாதகமான தடையாகவும் மாத்திரமே கண்டார். நூலாசிரியரினால் இவருக்கு எதிராக முன் வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு இவரால் பதில் கூறவோ மறுக்கவோ முடியாமல் போனது.

ஜனாதிபதியின் செயலாளரான லலித் வீரதுங்க இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அனுப்பியிருந்த முக்கியமான கடிதங்களையும் கருத்திற்கொள்ளாது 2005ம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் குற்றவியல் விசாரணை தொடர்பில் பாரா முகமாக இருந்தார்.

*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டு அரசியல் சாசனத்திற்கு முரணானதும், சட்ட விரோதமானதுமான ஒரு சட்டத்தின் மூலம், இலங்கை அரசிற்கு HDL மற்றும் ஹில்டன் ஹோட்டல் என்பன ரூபா 12,000 மில்லியன் கொடுக்கவேண்டும் என்ற முன்னடிப்படியில் மூலாதனமான 4000 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக சேர்க்கப்பட்ட வட்டியாக 8000 மில்லியன் ரூபாவினையும் காட்டி தன் வசப்படுத்தினார்.*

*HDL மீதான இந்த பொருளாதார நெருக்கடிக்கு நீதியமைச்சர் G.L. பீரிஸ் அவர்களின் முரண்பாடான செயற்ப்பாட்டையும் பொருட்படுத்தாது கேள்விக்குரிய தீர்ப்பை வழங்கிய மேன்நீதிமன்ற நீதிபதி C.V. விக்னேஸ்வரன் அவர்களும் நீதியமைச்சர் G.L. பீரிஸ் அவர்களும் பொறுப்பேற்று கணக்கொப்புவிக்க வேண்டும்.*